# ஆண்டறிக்கை

# 2020

## ஹோமியோபதி மருத்துவ சபை

சுதேச வைத்திய முறைகள் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும்

சமூகச் சுகாதார இராஜாங்க அமைச்சு

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுருக்கம் | 02 |
| 2. | முகவுரை | 03 |
| 3. | ஹோமியோபதி மருத்துவச் சபை | 04 |
| 4. | பின்புல விபரங்கள் | 05 |
| 5. | மருத்துவச் சபையின் நோக்கம் | 07 |
| 6. | மருத்துவச் சபையின் அதிகாரங்கள் | 08 |
| 7. | மருத்துவச் சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம் | 10 |
| 8. | நிறுவனத்தின் தகவல்கள் | 11 |
| 9. | ஹோமியோபதி மருத்துவச் சபையின் செயலாற்றுகை | 12 |
| 10. | வருடாந்த நிதி அறிக்கை | 21 |
| 11. | கணக்காய்வு அறிக்கை | |
| 12. | நல்வாழ்த்துக்கள் | |

# 01. சுருக்கம்

ஹோமியோபதி மருத்துவ சபையின் 2020ஆம் ஆண்டறிக்கை இதனூடாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த வருடம் ஹோமியோபதி மருத்துவ சபையின் நடவடிக்கைகள் 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதலாவது ஹோமியோபதி சபையினால் மேற்கொள்ளப்பட்டது. சபையின் கணக்கீட்டு நடவடிக்கைகள் அதற்குரிய அமைச்சான சுகாதார, போசணை மற்றும் சுதேச அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

மருத்துவ சபையின் ஊடாக நடாத்தப்படும் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் 12 இல் காணப்பட்ட 12 அலுவலக உதவியாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதன் ஊடாக மருத்துவ சபையின் நிறுவனக் கட்டமைப்பு பலமுள்ளதாக விரிவுபடுத்துவதற்கு கடந்த ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஹோமியோபதி பட்டதாரியான புதிய வைத்தியர்கள் பத்துபேருக்கு பதிவினை வழங்கியதன் ஊடாக இதுவரை ஹோமியோபதி வைத்தியசபையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை 303ஆக உயர்ந்துள்ளது. சட்டத்தின் 30 (1)ஆம் பந்திக்கு அமைவாக தொழிற்துறையினரை பதிவுசெய்வதற்கு பரீட்சைக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் 189 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

# 02. முகவுரை

‘**சமனான ஒன்றால் சமனான ஒன்றை அழித்தல்**’ எனும் இயற்கையான நியதிக்கு அமைவாக கட்டியெழுப்பப்பட்ட மருத்துவ முறையாக ஹோமியோபதி மருத்துவ முறையினைக் குறிப்பிட முடியும். 18ஆம் நூற்றாண்டில் இந்த மருத்துவ முறையானது உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது மேற்கத்திய மருத்துவ நிபுணரான கிருஸ்டின் பெட்ரிக் சாமுவெல் ஹானிமான் என்பவராலாகும். இன்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து வளர்ச்சியுறும் ஹோமியோபதி மருத்துவ முறை பொதுமக்கள் சுகாதார சேவையினுள் முக்கியத்துவம் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி, இந்திய அரசு ஹோமியோபதி மருத்துவ முறை தேசிய மருத்துவ சேவையுடன் இணைந்து, நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் மற்றும் மருத்துவசாலைகள் மூலம் ஹோமியோபதி சிகிச்சையை மக்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஹோமியோபதி மருத்துவ பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழுகங்கள், ஹோமியோபதி மருந்துகளை தயாரிக்கும் கைத்தொழிற்சாலை மற்றும் ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றை நிறுவப்படுகின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் மூலம் முதன்முதலில் இலங்கை ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவப்பட்டதுடன், அது ஹோமியோபதி மருத்துவ முறையை இலங்கையினுள் நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை மேற்கொண்டது. எனினும் அதில் எழுந்த சட்ட ரீதியான மற்றும் கட்டமைப்பு தடைகள் காரணமாக மருத்துவ சபை வீழ்ச்சியடைந்தது. எனினும், இந்த சவாலை எதிர்நோக்குவதற்காக பாராளுமன்றத்தினால் 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த புதிய சட்டத்தின் 1 ஆம் பிரிவின் 2ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ சபையை மீண்டும் நிறுவுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக சட்டத்தின் 51ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ சபையின் முதல் கட்டமாக ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையொன்று 2016ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கௌரவ அமைச்சரினால் நிறுவப்பட்ட ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையில் 04 ஹோமியோபதி மருத்துவர்களும் 06 அரச அலுவலர்களும் உள்ளடங்கியிருந்தனர். ஹோமியோபதி மருத்துவ சபையின் பதிவாளர், இந்த சபையின் செயலாளராவார்.

ஹோமியோபதி மருத்துவ சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அதன் பணிகளின் கீழ் கொண்டுவரப்பட்ட ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்கள் சுகாதார சேவையாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 12 மாவட்டங்களில் 12 ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள சிகிச்சை நிறுவனங்களுக்கு மேலதிகமாக கொத்மலை, அம்பலாந்தோட்டை, புத்தளம், மட்டக்களப்பு மற்றும் இங்கிரிய எனும் இடங்களில் அரச ஹோமியோபதி சிகிச்கை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த ஆண்டில் மருத்துவ சபையினால் பராமரிக்கப்படும் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கையை 12 என உயர்த்துவதற்கு இயலுமானதுடன், அதன் படி பணிக்குழுவிற்கு மேலும் 10 ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடிந்தது. மேலும் இந்த வருடம் புதிதாக இரண்டு மாவட்டங்களில், அதாவது காலி மற்றும் பொலொன்னறுவை மாவட்டங்களில் புதிய சிகிச்சை நிலையங்கள் இரண்டினை ஆரம்பிப்பதற்கு புதிய மருத்துவ சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

# 03. ஹோமியோபதி மருத்துவ சபை

## தொலை நோக்கு

''ஹோமியோபதி மருத்துவ முறையினை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்துதல்''

## செயற்பணி

''ஹோமியோபதி மருத்துவ முறைக்கான மனிதவள மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான உரிய கொள்கைகளை வகுத்து, அதனை பொது மக்கள் இடையே பரப்புதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.''

## நோக்கம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஹோமியோபதி துறையின் தொழில் கல்வி மற்றும் சுகாதார சேவை என்பற்றின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் அறிவு, திறன், அனுபவம் உள்ளவர்களின் ஊடாக நோயாளிகளின் ஆரோக்கியத்தை உருவாக்குதல் மற்றும் ஆரோக்கியமான நபர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு தொழில் அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் தொழிலின் கௌரவம் மற்றும் தரத்தினைப் பாதுகாத்தல்.

# 04. பின்புல விபரங்கள்

ஹோமியோபதி மருத்துவச் சபை நியதிச்சட்ட நிறுவனமாகும். முதல் மருத்துவ சபை ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையாக 2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் ஊடாக பெயரியப்பட்டதுடன், அதன் அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் கௌரவ அமைச்சருக்கு சாட்டப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து, உத்தியோகபூர்வ அரச அலுவலர்கள் மூவர், ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களிடையே தேர்தல் வைக்கப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவர், ஹோமியோபதி மருத்துவர் இருவர் கட்டாயமாக உள்ளடங்கும் வகையில் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரையும் உள்ளடக்கி 11 நபர்கள் அடங்கிய சபையொன்று அமைக்கப்படும். சட்டத்தின் கொள்கை மற்றும் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கான அதிகாரம் கௌரவ அமைச்சரிடம் உள்ளதுடன், உரிய துறை தொடர்பாக சட்டத்திற்கு அமைவாக ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும் அதிகாரம் சபைக்கு சாட்டப்பட்டுள்ளது.

### சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள்

2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தை அமுல்படுத்தும் திகதியில் அமுலிலிருந்த அனைத்து கட்டளைகளும், இந்தச் சட்டத்தின் கட்டளைகள் தயாரிக்கும் வரை, இந்த சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் எனக் கருதப்படும். புதிய சட்டத்தின் கீழ் அவசியமாக ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றதனால், 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் கீழ் செயற்பட்ட அனைத்து கட்டளைகளும் அவ்வாறே செயற்படுத்தப்படும்.

### 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்ட கட்டளைகள்

1. ஹோமியோபதி ஒழுங்குவிதிகள் - 1980
(மருத்துவதுறையைச் சேர்ந்தவர்களை பதிவுசெய்வதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் ஹோமியோபதி மருந்து இறக்குமதி)
2. ஹோமியோபதி மருத்துவ சபையின் சட்டம் - 1981
3. ஹோமியோபதி மருத்துவ சபையின் தேர்தல் ஒழுங்குவிதிகள் - 1998

## ஹோமியோபதி மருத்துவ சபையை நிறுவுதல்

இந்த நாட்டில் முதன் முதலில் ஹோமியோபதி மருத்துவ சபை, 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக, 1979ஆம் ஆண்டு விடயத்திற்கு பொறுப்பாக இருந்த அமைச்சரினால் நிறுவப்பட்டது. 5 வருடங்களுக்கு ஒருமுறை மருத்துவ தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் வைக்கப்பட்டு (முதலாவது மருத்துவ சபை தவிர்ந்த) நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தொடர்ந்தும் மருத்துவ சபை நியமிக்கப்படவில்லை. 1979ஆம் ஆண்டிற்கு பின்னர் இரண்டாவது மருத்துவ சபை 1998ஆம் ஆண்டும் மூன்றாவது மருத்துவ சபை 2006ஆம் ஆண்டும் நியமிக்கப்பட்டதுடன், அதன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் மூன்றாவதாக நியமிக்கப்பட்ட மருத்துவ சபை 2009ஆம் ஆண்டு அதன் காலம் முடிவடைவதற்கு முன்னர் கலைக்கப்பட்டு அடுத்த இரு வருடங்களுக்கு புதிய சபை நிறுவப்பட்டது.

அதன் உத்தியோகபூர்வ காலம் 2011 ஜனவரி 30ஆம் திகதி முடிவடைந்தது. அதுவரை காணப்பட்ட ஹோமியோபதி சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி புதிய சட்டம் கொண்டுவரும் வரை மருத்துவ சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் கௌரவ அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரினால் ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. 2011 ஜுன் 16ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க புதிய ஹோமியொபதி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 2016 ஜுலை 29ஆம் திகதி வரை ஹோமியோபதி மருத்துவ சபையின் நடவடிக்கைகள் இடைக்கால நிர்வாக சபையினால் நிறுவப்பட்டது. இவ்வாறு நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையில் 05 அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்தக்காலம் முழுவதிலும் ஹோமியோபதி மருத்துவர்களின் தொழில்நுட்பக் குழுவின் ஆதாரவு ஹோமியோபதி இடைக்கால நிர்வாகக் குழுவிற்கு வழங்கப்பட்டது.

## ஹோமியோபதி இடைக்கால சபை

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியொபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், 2016 ஒக்டோபர் 21ஆம் திகதி சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் சட்டத்தின் மூலம் அவருக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் ஊடாக ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. சட்டத்திற்கு அமைவாக முதலில் நிறுவப்பட்டது ஹோமியோபதி இடைக்கால சபையாகும். இதன் உத்தியோகபூர்வ காலம் இரண்டு வருடங்களாகும். சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான கட்டளைகளை தயாரிப்பதற்கு அவசியமான ஆரம்ப வரைவுகளை தயாரித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் இந்த சபையின் முதற்பணியாக கருதப்படுகின்றது. அதற்கமைவாக சட்டத்திற்கு அவசியமான ஒழுங்குவிதிகள், வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குவிதிகள். ஹோமியோபதி மருந்துகளின் இறக்குமதி, விநியோகம் மற்றும் தயாரிப்பு என்பதற்கான ஒழுங்குவிதிகள், ஹோமியோபதி மருத்துவப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்தின் 30ஆம் பந்திக்கு அமைவாக நடாத்தப்பட வேண்டிய பரீட்சைகளுக்கான ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான வரைவு தயாரிக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சபையின் தலைவரான டாக்டர் சிந்தன வீரசேகர அவர்களினால் ஹோமியோபதி திணைக்களத்திற்கான முன்வரைவும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த இடைக்கால சபையின் நியமனக் காலம் 19 ஒக்டோபர் 2018ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

# 05. மருத்துவ சபையின் நோக்கம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக ஹோமியொபதி மருத்துவ சபையின் நோக்கங்கள் கீழ்வருமாறு அமையும்.

1. ஹோமியோபதி மருத்துவத் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல்;

2. ஹோமியோபதி மருத்துவமுறைக்கு அமைவாக பொது மக்கள் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சமூகத்தினுள் ஹோமியோபதி வைத்தியமுறையை ஊக்குவித்தல்;

3. ஹோமியோபதி மருத்துவமுறையை கற்கைசெய்தல், ஆராய்ச்சி செய்தல் மற்றும் ஹோமியோபதி மருத்துவத் தொழிலில் ஈடுபடுதல், அதனை மேம்படுத்துதல் மற்றும்;

4. ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவி கொண்டு நடாத்துதல்.

5. அரச ஹோமியோபதி மருத்துவசாலைகள் தவிர்ந்த ஹோமியோபதி மருத்துவமுறைக்கு அமைவாக சிகிச்சைகளை வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்;

6. ஹோமியோபதி மருந்து வகைகள், ஔடதங்கள் மற்றும் ஏனையவற்றைத் தயாரித்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தலை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்.

# 06. மருத்துவ சபையின் அதிகாரங்கள்

சட்டத்தின் 16ஆம் பந்திக்கு அமைவாக கீழ்வரும் அதிகாரங்கள் ஹோமியோபதி மருத்துவ சபைக்குரியது ஆகும்.

01) ஹோமியோபதி மருத்துவத் தொழில்புரிபவர்கள், ஹோமியோதி மருந்து கலப்பவர்கள், ஹோமியோபதி தாதிகள் மற்றும் ஹோமியோபதி நிறுவனங்களை பதிவுசெய்தல்;

02) ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்கள் பெற்றிருக்கும் கல்வித்தகைமைகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல்;

03) ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களுக்கு தகைமைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அது பற்றிய சான்றிதழை உறுதிப்படுத்திக்கொள்ளல்;

04) ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பரீட்சையாளர்களை நியமித்தல்;

05) ஹோமியோபதி மருத்துவ முறைக்கு அமைவாக சிகிச்சை சேவைகளை வழங்குதல்;

06) ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவுதல், கொண்டு நடாத்துதல் மற்றும் பட்டதாரி கற்கை பாடநெறிகளைத் தயாரித்தல் ;

07) ஹோமியோபதி மருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி;

08) ஹோமியோபதி மருந்தினை விஞ்ஞான ரீதியாக தயாரித்தல் மற்றும் ஊக்குவித்தல்;

09) ஹோமியோபதி மருத்துவ வசதிகள், உபகரணங்கள், பாடநெறி மற்றும் பரீட்சைகள் தொடர்பாக குறைந்தபட்ச தரத்தினை குறித்துரைத்தல் மற்றும் பேணுதல்;

10) ஹோமியோபதி விடயங்களைக் கற்கும் மாணவர்களுக்கு ஏனைய வசதிகளை வழங்குதல், ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனத்தை மேம்படுத்தல், அவசிய நிறுவனம் மற்றும் நபர்களுக்கு நிதி உதவிகள் அல்லது வேறு உதவிகளை வழங்குதல்;

11) பட்டப்பின் படிப்பு ஹோமியோபதி மருத்துவ கல்வி தொடர்பாக மருத்துவ கல்விக்கு குறைந்தபட்ச தரத்தினை விதித்தல் மற்றும் பேணுதல்;

12) ஹோமியோபதி மருத்துவ முறைக்கு ஏற்றவகையில் பொது மக்கள் சேவையை மேம்படுத்தல்;

13) மருத்துவ கல்வி தொடர்பான பட்டம் மற்றும் ஏனைய கல்விகளை வழங்குதல் தொடர்பாக உயர் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பணிபுரிதல்;

14) 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை நிறுவுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்;

15) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான குழுக்களை அமைச்சரவை அனுமதியுடன் நிறுவுதல்;

16) அலுவலர்களுக்கு அல்லது குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்குதல்;

17) சபையின் அதிகாரங்கள். பணிகள் மற்றும் செயல்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுவதற்கு ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்;

18) சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுதல்.

# 07. மருத்துவ சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக மருத்துவ சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தலைவர் உள்ளடங்களாக 11 ஆகும். உத்தியோபூர்வமாக நியமிக்கப்பட்ட அமைச்சின் சிரேஸ்ட அலுவலர், திறைசேரி அலுவலர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி உள்ளடங்கலாக மூன்று அரச அலுவலர்களும், ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் நடாத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர்கள் கட்டாயமாக உள்ளடங்கும் வகையிலும், கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்ற நபர்களையும் உள்ளடக்கி 11 அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவர். மருத்துவ சபையின் செயலாளர் / பதிவாளர் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் நியமிக்கப்படுவார். சபை மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படுவதுடன், பதிவாளர் ஐந்து வருடங்களுக்கு நியமிக்கப்படுவார்.

# 08. நிறுவனத்தின் தகவல்கள்

| | | |
|---|---|---|
| **நிறுவனத்தின் பெயர்** | :- | ஹோமியோபதி மருத்துவ சபை |
| **முகவரி** | :- | இலக்கம் 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,<br>வெலிசறை,<br>இராகம |
| **தொலைபேசி இலக்கம்** | :- | 011-2958175 |
| **தொலைநகல்** | :- | 011-2958175 |
| **மின்னஞ்சல்** | | homosri.mcouncil@gmail.com |
| **கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் நிலை** | :- | 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டத்தின் 15,16 மற்றும் 17ஆம் பிரிவுகளுக்கு அமைவாக நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றுடன் ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவப்பட்டுள்ளது. |
| **நிர்வாகக் கட்டமைப்பு** | :- | செயலாளர்/ பதிவாளர்<br>பணிக்குப் பொறுப்பான மருத்துவர்கள்<br>முகாமைத்துவ உதவியாளர்கள்<br>மருந்து கலப்பவர்கள்<br>அலுவலக உதவியாளர்கள் |
| **வங்கி** | :- | இலங்கை வங்கி – தப்ரபோன் கிளை, கொழும்பு 01.<br>கொமர்ஷல் வங்கி – ஜா-எல கிளை |

# 09. ஹோமியோபதி மருத்துவ சபையின் செயற்பாடுகள்

## 01.01.2020 – 31.12.2020

கடந்த வருடமான 2020ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ சபையின் நியமனங்களின்றி ஆரம்பமானதுடன், முன்னர் இருந்த சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பணிகளை தொடர்ச்சியாக நடத்துவதற்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. அதேபோல் கடந்த வருடத்தைப் போல், மருத்துவ சபையின் நடவடிக்கைகள் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவை அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் முழுமையான மேற்பார்வை மற்றும் அங்கீகாரத்தின் கீழ் முதல் 06 மாதங்களுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. செப்டெம்பர் 09ஆம் திகதி கௌரவ அமைச்சரினால் ஹோமியோபதிக்கான புதிய வைத்திய சபையினை நிறுவும் வரை மருத்துவ சபையினா நடவடிக்கைகள் இவ்வாறு முகாமைத்துவம் செய்யப்பட்டது.

2020ஆம் ஆண்டு, ஹோமியோபதி மருத்துவ சபையின் பணிகள் சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரு வருடமல்ல. 17.03.2020ஆம் திகதி தொடரக்கம் 11.05.2020 வரை கோவிட் நோய்ப்பரவல் காரணமாக கம்பஹா மாவட்டம் பூட்டப்பட்டதனால், வருடத்தின் இறுதி வரையில் இந்த மாவட்டத்தின் பொது போக்குவரத்து வசதிகள் உள்ளடங்களாக பல்வேறு சேவைகள் வரையறுக்கப்பட்டதனால், அலுவலகத்தின் பணிகள் முடக்கப்பட்டதற்கு பிரதானமாக அமைந்தது. கடுமையான ஊழியர் பற்றாக்குறையின் மத்தியில் கொண்டு நடாத்தப்பட்ட மருத்துவ சபையின் பணிகளுக்கு ஊழியர்களின் வருகையும் வரையறுக்கப்பட்டதாக அமைந்தமையினால், எதிர்பார்த்த செயலாற்றுகைகளை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்பன மட்டுப்படுத்துவதற்கான சூழ்நிலை உருவானது.

## 1. அரச ஹோமியோபதி சிகிச்சையிலையங்களின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம்

### 1.1 அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் செயலாற்றுகை.

சிகிச்சை நிலையங்களின் செயலாற்றுகையும் கோவிட் 19 நோய்ப்பரவல் காரணத்தினால் கடந்த வருடத்தில் காணப்பட்ட வளர்ச்சியை வீழ்த்தும் வகையில் அமைந்திருந்து. இங்கு அரசினால் நாள்தோறும் பரீட்சிக்கும் நோயாகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. அத்துடன், கடுமையான நிலமையின் கீழ் மட்டும் சிகிச்சை நிலையங்களுக்கு வரும் போக்கொன்று நோயாளிகளிடம் உருவானது.

ஹோமியோபதி மருத்துவ சபையினால் கொண்டு நடாத்தப்படும் 12 ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களிற்கு வருகை தந்த நோயாளிகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டள்ளது.

| தொடர் இல | சிகிச்சை நிலையம் | வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தெகிவளை | 7,633 |
| 2 | தொலங்கமுவ | 5,946 |
| 3 | பரகடுவ | 6,354 |
| 4 | குருநாகல் | 7,644 |
| 5 | கொத்மலை | 7,331 |
| 6 | மொனராகலை | 5,862 |
| 7 | பாலமுனை | 3,883 |
| 8 | புத்தளம் | 3,897 |
| 9 | மாத்தளை | 7,644 |
| 10 | அம்பலாந்தோட்டை | 3,150 |
| 11 | மட்டக்களப்பு | 3,635 |
| 12 | இங்கிரிய | 2,313 |
| | **மொத்தம்** | 65,292 |

## 1.2 அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் முகாமைத்துவம்

அரச ஹோமியோபதி நிலையங்கள் முகாமைத்தவம் செய்யப்படுவது ஹோதியோபதி மருத்துவ சபையினாலாகும். அதன்படி 2020ஆம் ஆண்டு முழுவதிலும் அதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டது. அதன்கீழ், ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல், நிறுவன ஊழியர்களின் நிர்வாகம், சிகிச்சை நிலையங்களின் நீர், மின்சார மற்றும் சுகாதார ஸேசைகளை வழங்கல், சிகிச்சை நிலைய உபகரணங்கள், மருந்துகள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்கல் மட்டுமல்லாது, கட்டிடங்களை பராமரித்தலும் மேற்கொள்ளப்பட்டது.

சிகிச்சை நிலையங்களுக்கு வழங்குவதற்கு கேள்வி கோரப்பட்டிருந்த மருந்துத் தொகை கிடைப்பதற்கு பல்வேறு காரணங்களினால் கிடைக்காது போனதனால், இறுதியில் கோவிட் 19 நோய்ப்பரவல் காரணத்தினால் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு இயலாமல் போனதனாலும், உள்ளூர் சந்தையில் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு உள்ளூர் சந்தையில் கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், அத்தியாவசியமான மருந்து வகைகள் சிலவும் கிளோபியுலஸ் கொஞ்சமும் கொள்வனவு செய்யப்பட்டது.

வருடாந்தம் சிகிச்சை நிலையங்களுக்கு வழங்கவேண்டிய மருந்துகள் இலங்கைக்கு கிடைக்காமல் போனதனால், சிகிச்சை நிலையங்கள் கடுமையான மருந்து தட்டுப்பாட்டின் கீழ் பேணப்பட்டது. வருட இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்து வந்திருந்தாக அறிக்கை கிடைத்தது..

## 02. ஹோமியோபதி கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் சிகிச்சை சேவைகளை நடாத்துதல்.

ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன், ஹோமியோபதி மருத்துவ சபையினால், நடமாடும் சிகிச்சை முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. எனினும் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இலங்கை மக்களினால் எதிர்கொள்ள நேர்ந்த கோவிட் -19 நோய்ப்பரவல் காரணதாக மக்களை அறிவூட்டுவதற்கான கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்தல் மற்றும் பொதுமக்களை ஒன்று சேர்த்து நடமாடும் சிகிச்சை சேவைகளை நடாத்துதல் என்பவற்றை சுகாதார வழிமுறைகளுடன் நடத்ததல் சிரமமான காரியமாகும். அதனால் இந்த வருடத்தினுள் நடமாடும் சேவைகள் மற்றும் கருத்தரங்குகள் என்பன மிகக் குறைந்த அளவிலேயே மேற்கொள்ப்பட்டன என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். அதன்படி கீழ்வரும் சிகிச்சை முகாம்களும் கருத்தரங்குகளும் பரகட்டுவ அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையம் மற்றும் அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டன.

| நாடாத்தியது | இடம் | நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. பரக்கட்டுவ அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையம் | எம்பிலிபிடிய ஜனாதிபதி வித்தியாலயம் - 2020.02.22 | ஹோமியோபதி கருத்தரங்கு மற்றும் சிகிச்சை முகாம் | 201 |
| 2. பரக்கட்டுவ அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையம் | பட்டுகேதர மத்திய மகா வித்தியாலயம், இரத்தினபுரி 2020.02.29 | ஹோமியோபதி கருத்தரங்கு மற்றும் சிகிச்சை முகாம | 56 |

## 03. ஹோமியோபதி மருத்துவ முறையை அறிமுகம் செய்தல் மற்றும் ஊக்குவிபதற்கான ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்.

*பத்திரிகைக் கட்டுரைகள்*

**01. இசிவர பத்திரிகை**

- 2020 ஜனவரி - கீல்வாதம் காரணமாக வலியினால் அவதிப்படும் உங்களுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020 பெப்பரவரி - இருதய நோய்களுக்கான நிரந்தர நிவாரணம் தரும் ஹாமியோபதி சிகிச்சை
- 2020 மார்ச் - தோலை அவலட்சணமாக்கும் மருக்களுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020 ஜூலை - இருதய நோய்களுக்கான நிரந்தர நிவாரணம் தரும் ஹாமியோபதி சிகிச்சை
- 2020 ஒகஸ்ட் - கோவிட் 19 போன்ற பரவும் நோய்களுக்கு நோயெதிர்ப்புசக்தியைக் கட்டியெழுப்பும் ஹோமியோபதி சிகிச்சை
- 2020 செப்டெம்பர் - தோல் உலரும் நோய்களுக்கான நிரந்தர நிவாரணம் தரும் ஹாமியோபதி சிகிச்சை
- 2020 ஒக்டோபர் - வலிமிகுந்த செலியுலிடிஸ் நோயை சுகாமாக்கும் ஹாமியோபதி சிகிச்சை
- 2020 நவம்பர் - பாக்கின்சன் நோய்க்கான நிவாரணம்
- 2020 டிசம்பர் - நீரழிவு நோயை சுகாமாக்கும் ஹாமியோபதி சிகிச்சை

**02. தருணிப் பத்திரிகை**

- 2020 ஜனவரி - விரைப்பினை இல்லாமலாக்கும் ஹோமியோபதி சிகிச்சை
- 2020 பெப்பரவரி - நீரழிவு நோய்காகன ஹோமியோபதி சிகிச்சை
- 2020 ஜுன் - கீல்வாதம் காரணமாக வலியினால் அவதிப்படும் உங்களுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020 செப்டெம்பர் - முதுகுவலி, நோ என்பன இருக்கும் முதியோர் உங்களுக்கு நிவாரணம்
- 2020 ஒக்டோபர் - ஹோமியோபதி சிகிச்சை மூலம் எதிர்ப்பு சக்திக்கு தாக்கத்தை தர முடியுமா?

**06.திவயின (திங்கள்)**

- 2020.01.13 - டெங்கு நோய்க்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020.02.10 - முதுகுவலிக்கு எவ்வாறான சிகிச்சை எடுத்தாலும் பெறுபேறு இல்லையா?
- 2020.03.12 - நீங்கள் பாத எரிவினால் அவதிக்கடுகின்றீர்களாழு
- 2020.05.04 - டெங்கு நோயை சுகப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை
- 2020.06.15 - கோவிட் 19 போன்ற பரவும் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியை கட்டியெழுப்பும் சிகிச்சை
- 2020.07.20 - வயதாகும் போது மூட்டுவலியால் அவதிப்படுகின்றீர்களா?
- 2020.09.14 - தோலை அவலட்சணமாக்கும் மருக்களுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020.10.12 - கோவிட் 19 போன்ற பரவும் நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2020.11.18 - ஜனாதிபதியின் முதலாவது பதவிப் பிரமாணம் மற்றும் பிரதமரின் பிறந்த நாளுக்கு ஹோமியோபதி வைத்தியர்களின் வாழ்த்துகளைக்கூறுமம் கடிதம்.
- 2020.12.21 - பாக்கின்சன் நோய்க்கு ஹாமியோபதி சிகிச்சை மூலம் மறுவாழ்வு

## 04 டாக்டர் மாத சஞ்சிகை

- 2020 ஜனவரி - குடல் இறக்க நோய்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020 பெப்பரவரி - கழுத்து வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020 மார்ச் - பெண்களுக்கான கீல்வாதம் காரணமாக வலியினால் அவதிப்படும் உங்களுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020 ஒகஸ்ட் - இதய நோய்களுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2020 செப்டெம்பர் - கோவிட் 19 போன்ற பரவும் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியை கட்டியெழுப்பும் சிகிச்சை
- 2020 ஒக்டோபர் - ஹோமியோபதி சிகிச்சைச்சை மூலம் தோல் உலரும் நோயை முற்றாகக் குணப்படுத்தல்
- 2020 நவம்பர் - வலிமிகுந்த செலியுலிடிஸ் நோயை சுகாமாக்கும் ஹாமியோபதி சிகிச்சை
- 2020 டிசம்பர் - பாக்கின்சன் நோயில் இருந்து மறுபிறப்பைத் தரும் ஹோமியோபதி சிகிச்சை

## 05. சிறிகத பத்திரிகை

2020 ஜுன் - முதுகுவலி, நோ என்பன இருக்கும் முதியோர் உங்களுக்கு நிவாரணம்

2020 ஜுலை - நரம்புச் சுருள் நோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை

2020 ஒகஸ்ட் - பாக்கின்சன் நோயில் இருந்து மறுபிறப்பைத் தரும் ஹோமியோபதி சிகிச்சை

2020 செப்டெம்பர் - முதுகுவலி, நோ என்பன இருக்கும் முதியோர் உங்களுக்கு நிவாரணம்

2020 ஒக்டோபர் - ஹோமியோபதி சிகிச்சை மூலம் எதிர்ப்பு சக்திக்கு தாக்கத்தை தர முடியுமா?

2020 நவம்பர் - நீரழிவுக்கான ஹோமியோபதி சிகிச்சை

2020 டிசம்பர் - பாத விரைப்புக்கு சரியான தீர்வு

## வானொலி நிகழ்ச்சிகள் V FM

- 2019 பெப்பரவரி 14 - ஹோமியோபதி சிகிச்சை முறை பற்றிய அறிமுகம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி

### 01. சுவர்ணவாஹினி

**2020.02.27** – பாக்கின்ஸன் நோய் பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்

### 02. தர்ம தம்ம தொலைக்காட்சி

2020.03.30 – ஹோமியோபதி வைத்திய முறையின் மூலம் கொரோன வைரஸைக் கட்டுப்படுத்த முடியுமா?

## 04 ஹோமியோபதி பட்டதாரி வைத்திய அலுவலர்களைப் பதிவுசெய்தல்

மருத்துவ சபை நியமிக்கப்படாத 02 வருடத்தில் புதிய வைத்திய அலுவலர்களை பதிவுசெய்யும் பணிகள் முடங்கியிருந்தன. புதிய மருத்துவ சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இயலுமானது. அதன்படி 15 ஹோமியோபதி பட்டதாரி வைத்தியர்கள் பதிவுசெய்வதற்கு விண்ணப்பித்திருந்ததுடன், இதில் இருவர் வெளிநாடு சென்றிருந்தமையினால் பதிவினைப் பெற்றுக்கொள்வதற்கு வரவியலவில்லை என அறிவித்திருந்தனர்.

அதன்படி மிகுதி 13 பேரும் மருத்துவ சபையில் பொது ஆவணத்தில் ஹோமியோபதி வைத்தியர்களாக பதிவுசெய்யப்பட்டனர்இ அதன்படி பதிவுசெய்த ஹோமியோபதி வைத்தியர்களின் எண்ணிக்கை 303 ஆக உயர்வடைந்தது.

## 05. ஹோமியோபதி மருந்து இறக்குமதிக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்

ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு வைத்தியர்களிளால் விண்ணப்பித்திருந்த டொலர் 68,344.395 மற்றும் யூரோ 1,435.53 பெறுமதியுடைய 16 விண்ணப்பங்களுக்கு தொழில்நுட்பக்குழு அனுமதியை வழங்கியது.

| | | | | |
|---|---|---|---|---|
| **I.** | Dr. W.D.N Leetus | - | | **€ 1035.53** |
| **II.** | Dr. W.D.N Leetus | - | **$ 7014.22** | |
| **III.** | Dr. W.D.N Leetus | - | **$ 8166.18** | |
| **IV.** | Dr. S.P Pathirage | - | **$ 2923.60** | |
| **V.** | Dr. W.D.N Leetus | - | **$ 1399.72** | |
| **VI.** | Dr. W.D.N Leetus | - | **$ 1481.75** | |
| **VII.** | Dr. Anusha Priyangani | - | | **€ 400.00** |
| **VIII.** | Dr. W.D.N Leetus | - | **$ 3153.50** | |
| **IX.** | Dr. N.H.S Manel | - | **$ 1175.08** | |
| **X.** | Dr. W.D.N Leetus | - | **$ 5461.60** | |
| **XI.** | Dr. W.D.N Leetus | - | **$ 5966.555** | |
| **XII.** | Dr. W.D.N Leetus | - | **$ 2900.00** | |
| **XIII.** | Dr. W.D.N Leetus | - | **$ 1621.60** | |
| **XIV.** | Dr. W.D.N Leetus | - | **$ 1599.76** | |
| **XV.** | Dr. W.D.N Leetus | - | **$ 2019.05** | |
| **XVI.** | Dr. W.D.N Leetus | - | **$ 2441.87** | |
| **XVII.** | State Pharmaceuticals Corporation of Sri Lanka | - | **$ 21019.91** | |
| | **Total** | = | **$ 68344.395** | **€ 1435.53** |

# 06. புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்தல்

2016ஆம் ஆண்டில் அங்கீகாரிக்கப்பட்ட ஹோமியோபதி மருத்துவ சபையின் புதிய பணியாட்குழுவுக்கு 02 புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பிக்க வேண்டிய அவசியமிருந்தது. இதற்காக காலி மற்றும் பொலொன்னறுவை மாவட்டங்களில் 02 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் கட்டிடங்களைக் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மருத்துவ சபை நியமிக்கப்படாததனால், அதன் கீழ் இப்பணிகளை மேற்கொள்ளவதற்கு இயலாமல் போனது. எனினும் புதிய மருத்துவ சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் காலி மாவட்டத்தின் ரத்கம பிரதேச சபை அனுசரணையின் கீழ் அந்த பிரதேசத்தில் சிகிச்சை நிலையத்தை ஆரம்பிப்பதற்கான பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டன். வருட இறுதிக்குழு ஆரம்பிப்பதற்கு அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 07. ஹோமியோபதி மருத்துவ சபையினை மீள நியமித்தல்

2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் ஊடாக இரண்டாவது மருத்துவ சபை சுதேச வைத்திய ஊக்குவிப்பு, கிராம மற்றும் ஆயர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு சிசிர ஜயகொடி அவர்களினால் 09.09.2020ஆம் திகதி நியமிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, உத்தியோகபூர்வ அரச அலுவலர்கள் மூவர், ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களிடையே தேர்தல் வைக்கப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவர், உள்ளடங்கும் வகையில் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரையும் உள்ளடக்கி 11 நபர்கள் அடங்கிய சபையொன்று 03 வருடங்களுக்கு நியமிக்கப்பட்டது. அதன்படி, 2020 வருடத்திற்கான ஹோமியோபதி வைத்திய சபையினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய விடயம் மருத்துவ சபை அமைக்கப்பட்டதாகும்.

## 10. வருடாந்த கணக்கு அறிக்கை

**ஹோமியோபதி மருத்துவச் சபை**

**31.12.2020ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்கு**

### உள்ளடக்கங்கள்

- கணக்கீட்டுக் கொள்கை
- 31 டிசம்பர் 2020ஆம் திகதியில் நிதி நிலமைக் கூற்று மற்றும் குறிப்புகள் (1இருந்து 8 வரை)
- 31 டிசம்பர் 2020ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் குறிப்புகள் (1 இருந்து 8 வரை)
- 31 டிசம்பர் 2020ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்புகள் (1 இருந்து 6 வரை)
- 31 டிசம்பர் 2020ஆம் திகதியில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான அறிக்கை
- 31 டிசம்பர் 2020ஆம் திகதியில் பரீட்சை மீதி

# கணக்கியல் கொள்கைகள்

## கணக்குகளை சமர்ப்பித்தல்

இலங்கை அரச கணக்கியல் நியம (2009) இலக்கம் 1ற்கு அமைவாகவாகும். இது “ தன்மையின் மீதான செலவு வகைப்பாட்டின் அடிப்படையில்” எனும் வகையில் வழங்கப்படுகின்றது. ஹோமியோபதி மருத்துவச் சபையின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களை அரசின் நன்கொடையாகவும், சபை செய்யும் செலவையும் நன்கொடையாகவும் கருத்தில் கொண்டு இறுதிக கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## தேய்மானங்களை ஒதுக்குதல்

அனைத்து நிலையான சொத்துக்களுக்குமான தேய்மானம் குறைந்து செல்லும் மீதியின் அடிப்படையில மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.12.2020ம் திகதி வரையுள்ள அனைத்து சொத்துக்களும் 12% வீத தேய்மான வீதத்தில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரச கணக்குகளுக்கான நியம் இலக்கம் 07 (24) ற்கு அமைவாக சொத்துக்களின் ஆகுசெலவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

31.12.2020ம் திகதி வரை சொத்துக்கள் தொடர்பாக, வருடத்தில் எத்தினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான தேய்மானம் முழு வருடத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் வைத்திய சபையின் 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் பற்றி 23.02.2020ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் 1.4.2 இல் (கணக்கீட்டுக் குறைபாடு) (ஆ) பந்தியில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்புக்கு அமைமவாக 2020ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 69ஆம் பந்திக்கு அமைவாக, அதாவது சபையின் சொத்துக்கள் தேய்மானம் செய்யப்படுவது சொத்தினை பயன்படுத்துவதற்கான தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னராகும். அதேபோல், சொத்தொன்றை புத்தகத்தில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும் எனக் கண்டறியப்பட்டதன் பின்னர் அந்த சொத்துக்கு தோய்மானம் வழங்கப்படமாட்டாது.

## பணிக்கொடைக்கான ஒதுக்கு

1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி, ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த அலுவலர்கள் பணிக்கொடை பெறத் தகுதியுடையவர்கள் மற்றும் சட்டத்தின் படி, ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த அலுவலர்களுக்கு மட்டுமே பணிக்கொடைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் 2020ம் ஆண்டுக்கு தகுதிபெற்ற 16 அலுவலர்களுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஹோமியோபதி மருத்துவச் சபை
## 2020.12.31ம் திகதியன்று நிதி நிலமைக்கூற்று

| | குறிப்பு | 2020 (ரூ.) | 2019 (ரூ.) |
|---|---|---|---|
| சொத்து | | | |
| நடைமுறைச் சொத்து | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 1 | 2,601,730 | 2,511,862 |
| | | 15,801 | - |
| நடைமுறையல்லாச் சொத்து | | | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 2 | 2,522,474 | 1,871,388 |
| கட்டட புனருத்தாபனம் | | 5,407,281 | 5,407,281 |
| வேறு உபகரணங்கள் | | 1,450 | 1,450 |
| | | **7,931,205** | **7,280,119** |
| முழுச் சொத்து | | **10,548,736** | **9,791,981** |
| பொறுப்பு | | | |
| நடைமுறை பொறுப்பு | | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டியது | 3 | **2,317,234** | **1,135,643** |
| நடைமுறையல்லாப் பொறுப்பு | | | |
| மொத்தப் பொறுப்பு | | 2,317,234 | 1,135,643 |
| தேறிய பொறுப்பு | | 8,231,502 | 8,656,338 |
| | | **10,548,736** | **9,791,981** |
| தேறிய சொத்து/ மூலதனம் | | | |
| மூலதனம் | | 2,562,144 | 2,562,144 |
| அரச மூலதன ஒதுக்கீடு | | 8,388,226 | 7,502,334 |
| கூட்டு பற்றாக்குறை/ மேலதிகம் | | (2,688,452) | (1,377,724) |
| கடந்த வருடத்திற்கு சீராக்கல் கணக்கு | | (30,416) | (30,416) |
| தேறிய சொத்து / கையிருப்பு | | **8,231,502** | **8,656,338** |

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு ஹோமியோபதி மருத்துவச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| ..................... | ............................ | ..................... | ...................... |
| பதிவாளர் | தலைவர் | குழு அங்கத்தவர் | தயாரித்தவர் |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | ஹோமியோபதி | கே.எஸ்.பியசிறி |
| மருத்துவச் சபை | மருத்துவச் சபை | மருத்துவச் சபை | ஓய்வுபெற்ற பிரதான கணக்காளர் |
| | | | சுதேச வைத்திய அமைச்சு |

| குறிப்பு 1 | 2020 (ரூ.) | 2019 (ரூ.) |
|---|---|---|
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | | |
| கொமர்ஷல் வங்கி | 1,953,157 | 1,874,489 |
| இலங்கை வங்கி | 452,673 | 441,473 |
| இலங்கை வங்கி இராஜகிரிய | 195,900 | 195,900 |
| | **2,601,730** | **2,511,862** |
| குறிப்பு 2 | | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் | | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் (கொள்வனவு விலை) | 4,686,042 | 3,800,150 |
| கழிக்கவும் | | |
| கூட்டு மீதி | (2,163,568) | (1,928,762) |
| தேறிய பெறுமதி | **2,522,474** | **1,871,388** |
| குறிப்பு 3 | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டியது | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 151,610 | 179,010 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காளர் கட்டணம் | 42,000 | 42,000 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய தொலைபேசிக் கட்டணம் | 6,835 | 3,997 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய மின்சாரக் கட்டணம் | 5,180 | 5,386 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய தண்ணீர்க் கட்டணம் | 14,892 | 20,292 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சம்பளக் கொடுப்பனவு | | 8,500 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடை | 1,997,328 | 840,650 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பயணச் செலவு | 36,805 | 28,691 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சிகிச்சை நிலையச் செலவு | 17,371 | 5,117 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சோலை வரி | 2,000 | 2,000 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய மொழிபெயர்ப்புக் கட்டணம் | 2,963 | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய நானாவித செலவுகள் | 40,250 | |
| | **2,317,234** | **1,135,643** |
| குறிப்பு 04 | | |
| 01.01.2020 அன்று திரட்டிய மிகை/ பற்றாக்குறை மீத கழி | (1377724) | (1377724) |
| 2019ஆம் ஆண்டுக்கான குப்பி மற்றும் உறைச் செலவுகள் தவறாக பதிவு செய்யப்பட்டமை சரி செய்யப்பட்டது | 408,651 | |
| 31.12.2020 ஆம் திகதியில் மீதி சேர்க்க | (969073) | |
| 2020 வருட செயலாற்றுகையின் பற்றாக்குறை ∴ மிகை | | |
| | (2,688,452) | (1,377,724) |

**குறிப்பு 5**

கணக்கினைச் சமா்ப்பித்தல்

இலங்கை அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியம (2009) இலக்கம் - 1ற்கு அமைவாக.

**குறிப்பு 6**

தேய்மானங்களை ஒதுக்குதல்

அனைத்து நிலையான சொத்துக்களுக்குமான தேய்மானம் குறைந்து செல்லும் மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.12.2020ம் திகதி வரையுள்ள அனைத்து சொத்துக்களும் 12% வீத தேய்மான வீதத்தில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரச கணக்குகளுக்கான நியம் இலக்கம் 07 (24) ற்கு அமைவாக சொத்துக்களின் ஆகுசெலவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 69ஆம் பந்திக்கு அமைவாக, அதாவது சபையின் சொத்துக்கள் தேய்மானம் செய்யப்படுவது சொத்தினை பயன்படுத்துவதற்கான தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னராகும். அதேபோல், சொத்தொன்றை புத்தகத்தில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும் எனக் கண்டறியப்பட்டதன் பின்னர் அந்த சொத்துக்கு தோய்மானம் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு 7**

பணிக்கொடைக்கான ஒதுக்கு

1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி, ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த அலுவலர்கள் பணிக்கொடை பெறத் தகுதியுடையவர்கள் மற்றும் சட்டத்தின் படி, ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த அலுவலர்களுக்கு மட்டுமே பணிக்கொடைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் 2020ம் ஆண்டுக்கு தகுதிபெற்ற 16 அலுவலர்களுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**குறிப்பு 8**

தற்போது சபைக்கு எதிராக 6 வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளதுடன், அவை கீழ்வருவனவாகும்.

1 7087/11/M இலக்கமுடைய, ஹோமியோபதி வைத்திய சபை மற்றும் அதன் 06 அங்கத்தவர்களை குற்றவாளியாக தெரிவித்து டாக்டர் நிமல் காமினி விஜேதுங்க அவர்களினால் கோப்பிடப்பட்டுள்ள வழக்கு, தெகிவளை சிகிசகை நிலையத்தில் கௌரவ சேவையை வழங்கிய அவரை சேவையில் இருந்து நீக்கியதற்கு எதிராக ரூபா மூன்று மில்லியன் கோரி போடப்பட்டுள்ள இந்த வழக்கு கல்கிச்சை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறுகின்றது.

2 13953/m இலக்கமுடைய ஹோமியோபதி வைத்திய சபையில் சேவையாற்றிக் கொண்டிருந்த (நிரந்தர அடிப்படையில் அல்லாது) எம்.ஆர்.டி சேரம் என்பவரை சேவையில் இருந்து அகற்றியத்றகு எதிராக ரூபா இரண்டு மில்லியன் நட்வீடு கோரி நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு போட்ப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைகள் நடைபெறுகின்றது.

